செ.வெ.எண்: 06/அக்டோபர் நாள்: 05.10.2020

## இராமநாதபுரம் மாவட்டம்

## சமுதாய வங்கி ஒருங்கிணைப்பாளர்/காப்பீடு சகோதரிகள் பணிக்கு தகுதியானவர்கள் விண்ணப்பிக்கலாம்
## மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.கொ.வீர ராகவ ராவ்,இ.ஆ.ப., அவர்கள் தகவல்.

தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தின் கீழ் மகளிர் சுயஉதவி குழுக்கள் மற்றும் வங்கிகளுக்கு இடையே ஒரு பாலமாக செயல்பட்டு வங்கி கடன், வங்கி கடனை திருப்பி செலுத்துதல், பொருளாதார விழிப்புணர்வு மற்றும் காப்பீடு போன்ற பணிகளை மேற்கொள்ள சமுதாய வங்கி ஒருங்கிணைப்பாளர்/காப்பீடு சகோதரிகளாக 36 நபர்கள் நியமனம் செய்யப்பட உள்ளனர். இப்பணிக்கு விண்ணப்பிப்போர் சம்பந்தப்பட்ட வட்டாரத்தில் வசிப்பவராக இருப்பதுடன் 18 முதல் 40 வயதிற்கு உட்பட்டவராகவும், மகளிர் சுய உதவி குழுவில் உறுப்பினராகவும், 12 ஆம் வகுப்பிற்கு மேல் தேர்ச்சி பெற்றவராகவும், கைபேசி இயக்க தெரிந்தவராகவும், கணினி இயக்க தெரிந்தவராகவும், இருசக்கர வாகனம் இயக்க தெரிந்தவராகவும் இருக்க வேண்டும். இப்பணிக்கு மதிப்பூதியமாக மாதம் ரூ.2,000/- வழங்கப்படும். விண்ணப்பிக்க விரும்புவோர் ஊராட்சி ஒன்றிய அலுவலகத்தில் செயல்பட்டு வரும் வட்டார இயக்க மேலாண்மை அலுவலகத்தில் சான்றிதழ் நகலுடன் 10.10.2020 தேதிக்குள்காக விண்ணப்பிக்கலாம்.

மேற்கண்ட தகவலை மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.கொ.வீர ராகவ ராவ்,இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

**வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், இராமநாதபுரம்.**